2025 – அக்டோபர் மாதம் 06– ஆம் தேதி திங்கட்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 169/2023*

*2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06– ஆம் தேதி திங்கட்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 3, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW 3, Dr. பிரவீன்தாஸ் |
| தந்தையார் பெயர் | : | Dr. தாஸ் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | எலும்பு முறிவு மருத்துவர் |
| வயது | : | 47 |

**<u>தேதி: 06.10.2025.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்பொழுது திருச்சி இரத்தினா குளோபல் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 18.01.2023 அன்று திருமதி. மல்லிகா வயது 63 என்பவர் சாலை விபத்தில் காயம் ஏற்பட்டு எங்கள் மருத்துவமனைக்கு அவசர சிகிச்சை பிரிவிற்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு தலையில் வீக்கம் இருப்பதை அறிந்து மற்றும் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவருக்கு சிடி ஸ்கேன் மற்றும் நுண்கதிர் எடுத்ததில் இடது மூளையில் இரத்தகசிவு மற்றும் வலது தோள்பட்டை எலும்பு (கிளாவிக்கல்) முறிவு ஏற்பட்டிருப்பதை அறிந்து அவரை ஐசியுவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மூளையில் ஏற்பட்டிருக்கும் இரத்தகசிவிற்கு மருத்துவர் சண்முகம் நியுரோ அவர் அறுவை சிகிச்சை செய்து அந்த இரத்தக்கட்டை அகற்றினார். மேலும் அவரது இடது தோள்பட்டை எலும்புமுறிவிற்கு அறுவை சிகிச்சை மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு

08.02.2023 அன்று விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர் 19.04.2023 அன்று உள்நோயாளியாக அவரை அனுமதித்து தலையில் மெஷ் கிரோவியோ பிளாஸ்டி என்ற அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு 24.04.2023 அன்று விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர் மேற்படி மனுதாரர் எங்கள் மருத்துவமனைக்கு வரவில்லை. மனுதாரர் சிகிச்சையின்போது தலையில் ஏற்பட்ட மூளையில் இரத்தக்கசிவு சரிசெய்யப்பட்டது. மேலும் மனுதாரர் தொடர் சிகிச்சை எடுத்திருந்தால் மேற்படி இரத்தக்கசிவு சம்மந்தமான தொடர் பின்விளைவு தவிர்க்கப்பட்டிருக்கும். மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட இரத்தக்கசிவின் பின்விளைவுகளால் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

மனுதாரர் எங்கள் மருத்துவமனையில் இரண்டு முறை சிகிச்சை எடுத்துக் கொண்டு விடுவிக்கப்பட்ட போது நல்ல முறையில்தான் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். மனுதாரர் மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட பொழுது அவரது GCS அளவு 7/15 ஆக இருந்தது. அவர் விடுவிக்கப்படும்பொழுது GCS அளவு இயல்பு நிலையில் இருந்தது. GCS அளவின் இயல்பு நிலை என்பது 15/15 ஆகும். மனுதாரர் விடுவிக்கப்படும் பொழுது என்னென்ன மருந்துகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மனுதாரருக்கு காயங்கள் குறித்து விடுவிப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் தெரிந்தால் மருத்துவமனையை அணுக வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதன் பின்னர் மனுதாரர் எங்கள் மருத்துவமனைக்கு வரவில்லை. மனுதாரரின் மரணம் குறித்து அறுதியிட்ட காரணம் என்னால் கூற இயலாது. பிணக்கூறாய்வு அறிக்கையில்தான் மரணத்திற்கான காரணம் கண்டறிய முடியும் என்று சொன்னால் சரிதான். மனுதாரரின் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு எங்கள் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்ட போது முழுமையாக நின்றுவிட்டது என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– கி. முரளிதரகண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**